# தூய லூர்து அன்னை திருப்பீடம்


தூய லூர்து அன்னை ஆலயம், 50 ஓ.்.பியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி எண் 6294 0624


(முதல் ஆண்டு)


நாள் 07 - 05 - 2017 இதழ் 24


## திருப்பலி நேரங்கள்

**வாரநாட்களில் - ஆங்கிலம்**

திங்கள் முதல் வெள்ளி வரை மதியம் 12:30
மற்றும் மாலை 6:30மணி

**சனி** மாலை 6:00மணி
மற்றும் மாலை 7:30மணி

**ஞாயிறு (ஆங்)** காலை 7.30மணி,11.30மணி
மற்றும் மதியம் 1:00மணி

**ஞாயிறு (தமிழ்)** காலை 9:30மணி
மற்றும் மாலை 6:30மணி

**பொது விடுமுறை** காலை 9:00மணி (ஆங்)
காலை10:00மணி(தமிழ்)

**சகாய அன்னை நவநாள் மற்றும் செப வழிபாடு**

ஆகியவை ஒவ்வொரு சனிக்கிழமையும் இரவு 8:00 மணி முதல் 9:00 மணி வரை தமிழில் நமது ஆலயத்தில் நடைபெறுகிறது. செப உதவி தேவைப்படுவோர் கலந்து கொள்ளவும்.

# பாஸ்கா 4ஆம் ஞாயிறு

**முதல் வாசகம் :** திப : 2:14a,36-41

**பதிலுரைப் பாடல் :**
திபா : 23:1-3a.3b-4.5.6.

**பல்லவி :** ஆண்டவரே என் ஆயர்; எனக்கேதும் குறையில்லை.

**இரண்டாம் வாசகம்:**1 பேதுரு 2:20b-25

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி:**
"அல்லேலூயா அல்லேலூயா! நல்ல ஆயன் நானே. நானும் என் ஆடுகளை அறிந்திருக்கிறேன்; என் ஆடுகளும் என்னை அறிந்திருக்கின்றன, என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா."

**நற்செய்தி வாசகம்:** யோவான் 10:1-10

## வழிபாட்டு நிகழ்வுகள்

| | | | |
|---|---|---|---|
| விவிலியப் பகிர்வு | ஞாயிறு | காலை 11:30மணி | (தமிழ்) |
| செபமாலை, லூர்து மாதா நவநாள் | முதல் ஞாயிறு | காலை 8:30மணி | (தமிழ்) |
| மரியாயின் சேனை | செவ்வாய் | மாலை 4:30மணி | (தமிழ்) |
| குழந்தை இயேசு நவநாள் | செவ்வாய் | மாலை 4:30மணி | (தமிழ்) |
| இறை இரக்கச் செபம் | செவ்வாய் | மாலை 5:45மணி | (ஆங்) |
| குழந்தை இயேசு நவநாள் | வியாழன் | மாலை 5:45மணி | (ஆங்) |
| இறை இரக்கச் செபம் | வெள்ளி | மாலை 5:45மணி | (தமிழ்) |
| திருமணி ஆராதனை வழிபாடு தொடர்ந்து திருப்பலி | முதல் வெள்ளி | மாலை 6.30மணி | (ஆங்) |
| திருஇருதய நவநாள் செபம் & திருப்பலி (முதல் வெள்ளி தவிர) | வெள்ளி | மாலை 6:30மணி | (ஆங்) |
| புனித பியோ செபவழிபாடு | மா.தின் 23ம் நாள் | மாலை 8:30மணி | (தமிழ்) |
| சாட்சிய கூடார செபவழிபாடு | முதல் ஞாயிறு | மதியம் 2:00மணி | (தமிழ்) |

நல்லாயன் அல்லது இறை அழைத்தல் ஞாயிறாம் இன்று, அனைத்துத் திருப்பலிகளிலும் எடுக்கப்படும் காணிக்கை நமது உயர் மறைமாவட்ட குருத்துவக் கல்லூரிக்கு அனுப்பிவைக்கப்படும்.



## இரண்டாவது காணிக்கை

இவ்வார இரண்டாவது காணிக்கை புனித வின்சென்ட் தே பவுல் குழுவுக்காக எடுக்கப்படும். உங்கள் காணிக்கைக்கு மிகவும் நன்றி.

### விவிலியப் பகிர்வு குழு ஆராதனை வழிபாடு



நாள் : முதல் ஞாயிறு, 7 - 5 - 2017
நேரம்: காலை 11.30 மணி முதல் மதியம் 12.30 மணி வரை
இடம் : புனித பேர்னதெத் அறை
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**பொது விடுமுறை திருப்பலி நேரம்**



தேதி : புதன், 10-05-2017

நேரம் : காலை 9:00மணி - (ஆங்கிலம்)
காலை10:00மணி - (தமிழ்)

* பங்கு அலுவலகத்திற்கு விடுமுறை
*நுழைவு வாயில் இரும்பு கதவுகள் (Main Gates) மதியம் 12 மணி முதல் மூடப்பட்டிருக்கும்.



### ஆலய துப்பரவு மற்றும் தூய்மைப் பணி

தேதி : ஞாயிறு, 21-05-2017
நேரம் : மதியம் 2.30மணி

**ஆலய துப்பரவு மற்றும் தூய்மைப் பணியை முன்னிட்டு நமது ஆலயம் இன்று பிற்பகல் 2.30மணி முதல் 4.00மணி வரை மூடப்பட்டிருக்கும்.**

நமது ஆலயத்தை தூய்மைப்படுத்த தன்னார்வலர்களை அன்போடு அழைக்கின்றோம்.

புனித லூர்து அன்னை சமூகக் கூடத்தின் கட்டுமானப் பணிக்காக மேற்கொள்ளப்பட்டு வரும் நிதிதிரட்டும் பணியை மறைமாவட்டமானது, தற்காலிகமாக நிறுத்திவைக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளது. எனவே மறு அறிவிப்பு கொடுக்கப்படும் வரை இவ்வசூல் நிறுத்தி வைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

**நமது பங்கில் மாதத்தின் ஒவ்வொரு முதல் ஞாயிற்றுக்கிழமையும் தமிழில் திருமணி ஆராதனை வழிபாடு நடைபெறும். இன்று மாலை 5.00 மணிக்கு நடைபெறும்.**

**நம் குடும்பங்களை திரு இருதய ஆண்டவருக்கு ஒப்புக்கொடுக்கவும், தேவ அழைத்தலுக்காகவும், உலக அமைதிக்காகவும் செபிக்க, இறைவனின் திருப்பாதத்தில் அமர உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.**



## சிந்தனை

அன்புடையீர்,
உயிர்ப்பின் காலம் நான்காம் ஞாயிறான இன்று நல்லஆயன் ஞாயிறாகக் கொண்டாட இறைவனின் திருவடி நாடி ஆலயம் வந்துள்ள இயேசுவின் அன்பார்ந்த இறைமக்களே உங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கிறோம்.

இயேசு தன் ஆடுகளுக்கு முன்னே பாதுகாப்பாகச் செல்லும் நல்ல ஆயனாக இருக்கின்றார். இந்த நல்ல ஆயன் மானிடராகிய நம் வாழ்விற்காகத் தன்னையே தியாகம் செய்யும் தாயுள்ளம் படைத்தவராகத் தான் இருப்பதை இறைமகன் இயேசு இன்றைய நற்செய்தியில் பதிவு செய்கின்றார்.

இயேசுவின் அன்புக்கு உரிய நாம் அவருடைய குரலைக் கேட்கின்றோம். அவர் நம் ஒவ்வொருவரையும் பெயர் சொல்லி அழைக்கிறார். அவரது அழைப்பை ஏற்று நாமும் இயேசுவைப் போல் தந்தையுடன் இறைவேண் டலில் நிலைத்திருந்து அவரின் சீரியப் பார்வையில் நம்மிடம் காணப்படும் அனைத்து வேறுபாடுகளைக் களைந்து இணைந்துச் செயல்படுவோம் இறையரசை அறிவிக்க..

இறையழைத்தல் ஞாயிறான இன்று அவரவர் இருக்கும் நிலையில் இருந்து இறைவனின் அழைத்தலை உணர்ந்து எத்தனை தோல்விகள் வந்து வாட்டினாலும் அதனை வெற்றிக்கொள்ள இத்திருப்பலியின் வழியாக நம் ஆயனாம் இறைமகன் இயேசுவிடம் மன்றாடுவோம் ஓர் அணியாக...

**உங்கள் கவனத்திற்கு** மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ அல்லது உங்கள் வீட்டிலோ உங்களுக்காகச் செபிப்பதாகக் கூறிக்கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். **ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உங்கள் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு ஏற்க வேண்டும்.**

# சிங்கப்பூர் உயர் மறைமாவட்டம்
# தமிழ் திருப்பலி நடைபெறும் நேரங்களும் இடங்களும்

| | | |
|---|---|---|
| புனித லூர்து அன்னை ஆலயம்<br>50 ஓபியர் ரோடு | : | ஞாயிறு காலை 9.30<br>ஞாயிறு மாலை 6.30<br>பொது விடுமுறை நாட்கள் காலை 10.00 |
| உயிர்த்த ஆண்டவர் ஆலயம்<br>91 தோ பா யோ சென்ட்ரல் | : | மாதத்தின் இரண்டாவது ஞாயிறு மதியம் 4.00 |
| புனித பிரான்சிஸ் அசிசி ஆலயம்<br>200 பூன் லே அவின்யூ | : | மாதத்தின் முதல் ஞாயிறு மாலை 7.30<br>மாதத்தின் இரண்டாவது ஞாயிறு மாலை 7.30<br>மாதத்தின் மூன்றாவது ஞாயிறு மாலை 7.30<br>மாதத்தின் ஐந்தாவது ஞாயிறு மாலை 7.30 |
| புனித அந்தோணியார் ஆலயம்<br>25 உட்லாண்ட்ஸ் அவின்யூ 1 | : | மாதத்தின் முதல் சனி மாலை 7.30<br>மாதத்தின் இரண்டாவது சனி மாலை 7.30 |
| நற்கருணை ஆலயம்<br>1, காமன்வெல்த் டிரைவ் | : | மாதத்தின் மூன்றாவது ஞாயிறு மாலை 7.00 |
| நட்சத்திர மாதா ஆலயம்<br>10, ஈசூன் 22வது தெரு | : | மாதத்தின் இரண்டாவது ஞாயிறு மாலை 6.30<br>மாதத்தின் மூன்றாவது சனி மாலை 6.30 |
| கிறிஸ்து அரசர் ஆலயம்<br>2221, அங் மோ கியோ அவின்யூ 8 | : | மாதத்தின் நான்காவது ஞாயிறு மாலை 6.30 |
| சம்மனசுகளின் இராக்கினி ஆலயம்<br>5, புக்கிட் பாதோக் அவின்யூ 2 | : | மாதத்தின் நான்காவது சனி மாலை 8.00 |


**அருள்தந்தையர்**

அருள்தந்தை மைக்கேல் சீத்தாராம் (frmichaelsitaram@gmail.com) - பங்குத்தந்தை
அருள்தந்தை தே. நித்திய சகாயராஜ் (nithiya@catholic.org.sg) - உதவிப் பங்குத்தந்தை
அருள்தந்தை பால் இயோ (fryeopaul@gmail.com) - உதவிப் பங்குத்தந்தை

**பங்கு அலுவலகம்**

(ololsec@gmail.com)

இணையதள முகவரி: http://www.tamilcatholic.org.sg; http://facebook.com/ChurchOfOurLadyOfLourdesSingapore


அன்புப் பங்குமக்களே! தாங்கள் இருப்பது இறைவனின் இல்லம். எனவே உங்கள் கைத் தொலைபேசியை அணைத்து வைக்குமாறும், ஆலயத்தின் உள்ளே உணவு உண்பதையும், பானங்கள் அருந்துவதையும் தவிர்க்குமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.